விலை ரூபா 1–25

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 வைகாசி 11 ரம்ழா 3 இதழ் 103
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 24-5-1985

● பாராளுமன்றம்நோக்கிச்சென்று 500 பௌத்த பிக்குகள் நடத்திய சத்தியாக்கிரகம்!

(கொழும்பு)

சுமார் ஐநூறு பௌத்த பிக்குகள் நேற்றுக் காலை பாராளுமன்றம் நோக்கி அமைதியாக ஊர்வலமாகச் சென்று அமைச்சர்களிடமும், எம். பி க்களிடமும் மகஜர் களைக் கையளித்தனர்.

பாராளுமன்றம் நோக்கிச் சென்ற பிக்குகள் இடைநடு விலே தடுக்கப்படவே, பாராளு மன்றப்பாதையில்சுமார்மூன்று மைல் தூரம்வரை நடைபாதை யிலேயே அமைதியாக அமர்ந்து சத்தியாக்கிரகம் செய்தனர்.

பௌத்த பிக்குகள் கைய ளித்த மகஜரின் ஒரு பிரதியை அத்தனகல எம். பி. திரு லக்ஷ்மன் ஜெயக்கொடி பாரா ளுமன்றத்தில் நேற்றுமுழுவ தாக வாசித்தார். (தணிக்கை

9 கைதிகள் விடுதலை

[யாழ்ப்பாணம்]

கோப்பாய் திறந்த வெளிச் சிறைச்சாலையிலிருந்து கடத்

(5-ம் பக்கம் பார்க்க)

★ சபையில் 'சரத்' நேற்று மீண்டும் எழுப்பிய குரல்

தமிழருக்கு சுயாட்சி வழங்கி இனப்பிரச்னையைத் தீருங்கள்!

அரசுடன் ஒத்துழைக்காவிட்டால் பயங்கரவாதி என்று அர்த்தமா?

(பி ராஜரெட்னம்)

"சிங்கள மக்களைப் போல் தமிழ் மக்களும் சகல உரிமைகளையும் அனு பவிப்பதற்கு உரிமையுடையவர்கள். தமிழ் மக்களின் எதிர்கால நல் வாழ்வுக்காக அவர்களுக்கு உயர்ந்த தரத்தில் சுயாட்சி உரிமை வழங்கப்படவேண்டும். இதன் மூலமே இனப் பிரச்னையைத் தீர்க்கமுடியும் இல்லையானால், எல்லோருமே ஒரு பயங்கரமான நிலைக்குத் தள்ளப்படலாம்!"

கலவான எம். பி. திரு. சரத் முத்தெட்டுவகம நேற்று பாராளுமன்றத் தில் பேசுகையில் மேற்படி எச்சரிக்கை விடுத்தார்.

அவசரகால நிலை நீடிப்பது தில் திரு சரத் தொடர்ந்து பிரிவினையை ஆதரிக்க வில்லை தொடர்பாக பாராளுமன்றத் பேசுகையில் தொழிலாள என்றும், அரசாங்கம் சகல தில் நடைபெற்ற விவாதத் வர்க்கத்தின் நன்மை கருதி (6ம் பக்கம் பார்க்க)

பாராளுமன்றத்தில் ஒலித்த 'ஈழம்வானொலி'

(கொழும்பு)

பி. பி. வி வானொலியின் செய்தியின்படி வல்வெட்டித் துறையில் எழுபது தமிழர் கள் கொலை செய்யப்பட் டார்கள் எனவும், அதில் 20 பேர் ஒரு கட்டிடத்துக்குள் அடைக்கப்பட்டு குண்டு வைத்து படுகொலை செய்யப் பட்டுள்ளனர் எனவும் தெரிய வந்துள்ளது. இதே விபரங் களை ஈழம் வானொலியும் தெரிவித்துள்ளது" என்று

[6ம் பக்கம் பார்க்க]

குருநகர் வீடுகளில் மக்கள் குடியேறினர்

(யாழ்ப்பாணம்)

குருநகர் தொடர்மாடிக்கட் டிட வீடுகள், நேர்முகப்பரீட் சையில் தெரிவுசெய்யப்பட்ட வர்களுக்கு நேற்றுப் பிற்பகல் உத்தியோகபூர்வமாக வழங்கப் பட்டன.

தேசிய வீடமைப்பு அதிகார சபையின் மாவட்ட முகாமை யாளர் திரு. த. பூ முருகையா, அதிகார சபை உத்தியோகத்

[6ம் பக்கம் பார்க்க]

★ இது கோவில் அல்ல; தபால்அலுவலகம்! தெற்கு வாசல் மூடப்பட்டு வடக்கு வாசல் இயங்குகிறது!

நேற்றுமுதல் வழமையான வேலைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ் பிரதம தபால் அலுவலகத்தில் நேற்றுப் பிறபகல் தொடக்கம் ஊழி யர்களும், உத்தியோகத் தர்களும் கடமையாற்றத் தொடங்கி விட்டதாக உத்தி யோகத்தர் ஒருவர் தெரி வித்தார்.

இத்தபால் அலுவலகத்தின் தெற்குப்புறமாக [கோட் டையை நோக்கி உள்ள வாசல்கள் மூடப்பட்டு, வடக் குப்புறமாக [கே. கே. எஸ். வீதி முன்புறமாக] வாசல் திறக்கப்பட்டு ஊழியர்கள் கருமமாற்றத் தொடங்கியுள் ளனர்.

கடந்த சனிக்கிழமை பகல் சீருடைதரித்தவரிகளால் தபால் அலுவலகத்தில்

(6-ம் பக்கம் பார்க்க)

விபத்தில் ஒருவர் பலி!

(வவனியா)

வவனியா, கண்டி வீதியில் அமைந்துள்ள தமிழ் மகா வித்தியாலயத்துக்கு அருகில் இடம்பெற்ற சைக்கிள் - இ. போ ச. பஸ் விபத்தில் சரத் சந்திர (வயது 38) என்ற நபர் மரணமடைந்துள்ளார். இது தொடர்பாக பஸ் சாரதி சுப் பிரமணியம் பொலிஸ் விசா ரணைக்கு அழைத்துச்செல்லப் பட்டுள்ளார். (ரா)

'உமாவை'ச் சந்திக்க ஜாபீர் ஏ. காதரும் தயாராம்

(கொழும்பு)

"உமாமகேஸ்வரனை சந்திக் கச்செல்வதற்கு கலவானை எம். பி. திரு. சரத் முத்தெட்டுவ கம தயாரி என்றால்; நானும் அவருடன் செல்லத்தயாராக உள்ளேன்" என்று கொழும் மத்தி இரண்டாவது எம். பி. அல்ஹாஜ் ஜாபீர் ஏ காதர் பாராளுமன்றத்தில் நேற்றுத் தெரிவித்தார்.

இன்றுள்ள பிரச்னைக்கு எப் படியாவது தீர்வுகாணவேண் டியதே முக்கியம் என்றும் அல்ஹாஜ் ஜாபீர் ஏ. காதர் கூறினர். (ரா)

திருமலைச் சம்பவம் ஐவர் பலி!

(திருகோணமலை)

திருகோணமலையில் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின்போது ஐந்து பேர் பலியானார்கள்.

பலியானவர்களில் ஒருவர் திருமலை பிரஜைகள் குழுவின் தலைவர் திரு. க. சிவபாலனின் மகன் கெங்காதரன் வயது33 ஆகும். இதரது மூத்த மகன் 1983 ஜூலைக் கலவரத்தின் போது கொழும்பில் பலி யாகியது குறிப்பிடத்தக் கது. (ரா)

நேற்றும் மரண தண்டனை

[கரவெட்டி]

நெல்லியடிச் சந்திக்கண்மை யில் மேலும் ஒருவரின் சடலம் மின்கம்பத்துடன்கட்டப்பட்ட நிலையில் நேற்றுக்காலை காணப் பட்டது.

இச்சடலத்துக் கருகாமையில் தொங்கவிடப்பட்டிருந்த கட

(6ம் பக்கம் பார்க்க)

ஓர் உருக்கமான

வேண்டுகோள்

இம்மாதம் 15-ந் திகதி இரவு கடத்திச் செல்லப்பட்ட எமது தொழிலதிபர்

ச. இராசரத்தினம் அவர்களை

நிபந்தனைகள் எதுவுமின்றி விடுதலை செய்து எமது கண்ணீரைத் துடைக்குமாறு மிகவும் பணிவன்புடன் வேண்டுகின்றோம்.

மின்தறி நிலையம் ஒன்றையும் அரிசி ஆலையையும் நடத்தி அதில் நூற்றுக்கு மேற்பட்டவர்களுக்கு வேலை வழங்கி அத்தனை குடும்பங்களும் சீவனம் நடத்த உதவிக்கொண்டிருந்த பண்பாளரைக் கடத்தியதன் நிமித்தம் நாம் தாங்கொணாத்துயரம் அடைந்துள்ளோம்.

அன்னார் நோயாளியாக இருப்பதும் தினசரி பலவகை மருந்துக்களை எடுப்பதும் கடத்திய நாள் தொட்டு மருந்துக்களைக் குடியாதிருப்பதும் அவரின் உடல்நிலை மோசமடைக்கூடியதாக இருக்குமோ என நாம் பீதியடைகின்றோம். அவரது துணைவி யாரும் நோயாளியாகையால் கடத்திய நேரத்தி லிருந்து ஆறுதலற்று ஆதிர்ச்சியிலிருந்து மீளவில்லை

அண்மைக்காலத்தில் பல சிரமங்கள் மத்தியிலும் தொழிலில் பலத்த நட்டத்தை தாங்க வேண்டிய நிலையிலும் தமது தேக சுகத்தைப் பார்க்காது எமது நலனையும் தமிழ்ச்சமூகப் பொருளாதார நலன் கருதியும் தொழிலைத் தொடர்ந்து நடத்தி வந்தார்கள் என்பது பலர் அறிந்த விடயம்.

எல்லாவற்றையும் கருத்தில் கொண்டு எமது தொழிலதிபரை உடனடியாக விடுவிக்குமாறு சம்பந்தப்பட்டவர்களை மன்றுட்டமாக வேண்டுகின்றோம்.

ராஜன் மின்தறி அரிசி ஆலை

ஊழியர்கள்

புன்னாலைக்கட்டுவன்,
21-05-85. (3399)

அறிவளம்பரம்

தேவை

இறைச்சிக்குரிய கோழிகள் தேவை தொடர்பு கொள்ள வேண்டியஇடம்:அண்ணுபாம், இணுவில் கிளை:அண்ணுபாம், செம்மாதெரு,(மொஸ்க்லேன்) யாழ்ப்பாணம். 3376

தெல்லிப்பழை ஐக்கிய வைத்தியசாலைச் சங்கம்

பதிவு எண்: ஜே 1013
ஆரம்பம்: 1949

அன்புடையீர்!

தெல்லிப்பழை ஐக்கிய வைத்தியசாலைச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் 1985-ம் ஆண்டு யூன் மாதம் 16-ம் திகதி 16 6 85) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 30 மணிக்கு நடைபெறும். அங்கத்தவர்கள் எவரேனும் பிரேரணைகளிருப்பின் அவை தமிழில் எழுதப்பட்டு பிரேரிப்பவர் அனுவதிப்பவர் ஆகிய இருவராலும் கையொப்பமிடப்பட்டு காரியதரிசிக்கு 5.6 85க்கு முன் சேரக்கூடியதாக அனுப்ப வேண்டும். முகவரியில் மாற்றமிருப்பின் தயவுசெய்து அறியத்தரவும்.

குறிப்பு:- 1983-1984 ஆண்டு காலத்துக்குரிய எண்பார்வையாளர் அறிக்கையைப் பார்வையிடவிரும்புவோர் தினமும் காலை 12-00 மணிக்குமுன்னர் காரியாலயத்தில் பார்வையிடலாம் என்பதை அறியத்தருகின்றோம்.

இங்ஙனம்
தங்கள் கூட்டுறவு
சேவைக்குரிய
செ சச்சிதானந்தம்
கௌரவ காரியதரிசி
தெல்லிப்பழை.
22-5-85 3401

கலர் பீலிம் சுருள்களை PROCESSING & PRINTING செய்வதற்கு கொழும்பு ஸ்ருடியோ

விற்பனைக்கு

மினி தியேட்டருக்கும் வீடியோ சென்ரருக்கும் தேவையான சகல சாதனங்களும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: மல்ரி சேவிசஸ், 37 (351) மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம், தொலைபேசி இல: 22762. 3392

நல்ல நிலையில் பாவனையில் உள்ள NV 300 EN டெக் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: ஸ்கைரேஸ் லெக்ரோன்ஸ், இல: 1. ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3405

தட்டாதெரு சந்திக்கு 300 யார் தூரத்தில் சகல வசதியுடன் இரண்டு வீடுகளும். ரெயிலர் மொடல் சிங்கர் தையல் மெஷினும், ஓட்டுமடம் ஆலடிச் சந்திக்கு அருகாமையில் 8 பரப்பு காணியும் விற்பனைக்குண்டு. நியுகுகானந்தா பவன் தேனீர் கடை. தட்டாதெரு சந்தி, யாழ்ப்பாணம். 3409

தவறிவிட்டது

இல: 631742572 V எஸ் கதிர்காமநாதன் என்பவருடைய அடையாள அட்டை யாழ்ப்பாணத்திற்கும் - பருத்தித்துறைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ் குறிப்பிட்டிருக்கும் விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். சிறி கண்ணு இன்டஸ்ரீஸ், சோதி வீம்படிலேன், மானிப்பாய். 3404

நாகேந்திரம் இராஜகுமாரன் மானிப்பாய் என்பவரின் தேசிய அடையாள அட்டை இல: 590231240 V சிறு டயரி ஒன்றுடன் யாழ்ப்பாணத்திற்கும் - மானிப்பாய்க்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ் குறிப்பிடும் விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். "சிவா ஸ்ருடியோ", மனிப்பாய். 3408

விற்பனையாளர்கள் தேவை

எமது பத்திரிகைகளுக்கு முற்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் கீழ்க்கண்ட இடங்களுக்குத் தேவை.

மந்திகை, மாங்குளம், அனலைதீவு, நெடுந்தீவு, நயினாதீவு. அல்லைப்பிட்டி.

விண்ணப்பிக்கவும்:

பொது முகாமையாளர்,
ஈழநாடு லிமிட்,
த. பெ. எண்: 49,
யாழ்ப்பாணம்.

3412

விற்பனைக்கு

பாவனையிலிருந்த வீட்டுத் தளபாடங்கள்- T V செற், ரேடியோ உட்பட உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: பைலெற் இன்விறியூட், 151, செம்மணி ரோட், நல்லூர். 3410

நல்லஇன அல்சேஷன் நாய்க் குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டியது. ச நல்லநாதன், 11/1, ஓடைலேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். 3375

ஊரெழு பிள்ளையார் கோவிலுக்கு சமீபத்தில் மின்சாரத்துடன் வீடும், ஐந்து பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். சட்டத்தரணி இராசரத்தினம், ஊரெழு கிழக்கு, சுன்னாகம். 3368

சீயாக்காய், பச்சை அரிசி, பயறு, வெந்தயம் ஆகிய நான்கு சேர்வையிலுள்ள சீயாக்காய் பவுடர் விற்பனைக்குண்டு. பெக்கட் 5/50 தொடர்பு கொள்க. M.G.M and Stores, 777 காங்கேசன் துறை வீதி and 208 முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். தொலைபேசி: 22611. (2820)

வைத்தியம்

மூலவியாதிகள், பாரிசவாதம், முழங்கால் வாதம் போன்ற வாதரோகங்களுக்கும், பீனிசம், எக்ஸிமா, தொய்வு, நரம்புத் தளர்ச்சி, மாதவிடாய் கால உபத்திரவங்கள், குழந்தைகள் சம்பந்தமான வியாதிகளுக்கும் விசேடமான சித்த, ஆயுர்வேத சிகிச்சை பெறலாம். Dr. மங்களாம்பிகை அம்பாள் D A.M., மங்களபதி வைத்தியசாலை, 41/5, சங்கிலியன் வீதி, நல்லூர். 3407

SALE

Theodolite Rolling Ruller, Guitar Colcur T. V. 2030 and Antena Gas cooker with Cylinder, Pyrex Dinner Set, Necchi Mechine, Singer Mechine with motor, 403 Car Susuki 125 Asia Cycle 18" Ladies Drawing Room Suits (imported) Cabinets Etc. 480, Navalar Road, Nallur Cross Road Junction. 3406

SERVICE

Repairs or Spray Painting of your Refrigerators Freezers, Air Conditioners. All the repairs are attended by Qualified and Trained Technicians at our fully equipped work-shop. Refrigeration Engineering Services (Uttar Electronics), 37/6 Stanley Road, Jaffna. 3217

முதல் ஆண்டு நினைவஞ்சலி

திரு. சிவசுப்பிரமணியம்
முத்தையா

அவர்களின் ஓர் ஆண்டு நினைவை முன்னிட்டு 24ம் திகதி அவரது இல்லத்தில் சமயக்கிரியைகள் நடத்தி 31-5-85 வெள்ளிக்கிழமை நல்லை ஆதீனத்தில் அன்னதானம் வழங்கப்படும்.

அன்பு மனைவி,
மகள், மற்றும்
குடும்பத்தினர்.

28/8, Mahathma Gandhi Road, Jaffna. 3371

திறப்பு விழா

சிவன் மேற்கு வெள்ளாந்தெரு சனசமூகநிலையம் இன்று (24-5-85) காலை 5-52க்கும் 7-22 வரையுமுள்ள சுபவேளையில்

திரு. கு. ஜெயம் (இலங்கை வங்கி) அவர்களால் திறந்துவைக்கப்படும். (3393)

31-ம் நாள் நினைவஞ்சலி

கந்தையா எட்வேட் கிங்ஸ்லி

மலர்வு:
23-3-1946

உதிர்வு:
24-4-1985

அன்புடனும், பாசத்துடனும் வாழ்ந்து எம்மை ஆறுத்துயரில் ஆழ்த்திவிட்டு திடீரென அணைந்துவிட்ட என் அன்புத் தெய்வமே நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்தாலும் உங்கள் நினைவு எம்மைவிட்டு என்றும் நீங்காது. உங்களின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்,
மனைவி மனோகரியும், குடும்பத்தினரும்.
ஆஸ்பத்திரி வீதி, மன்னார். 3395

10-வது ஆண்டு நினைவஞ்சலி

திருமதி புனிதவதி வேலும்மயிலும்
(செல்வி நாகநாதர்)

தோற்றம்:
1939-11-16

மறைவு:
1975-5-24

எம்மைவிட்டு மறைந்து பத்து ஆண்டுகள் கழிந்தும் உங்கள் நினைவுகள் எம்முள் பசுமை பூத்துத்திகின்றன.

துயருறும்:
சேந்தன் (மகன்), கணவன், பெற்றோர்,
உற்றார், உறவினர்.

3398

31-ம் நாள் நினைவஞ்சலி

திரு. இராமநாதர் சோமசுந்தரம்

[பிரபல சிற்பாசாரியும், சித்திரக் கலைஞரும், சோதிட வல்லுநரும்]

தோற்றம்:
2-1-1916

அமரத்துவம்:
24-4-1985

திதி: 24-4-1985

எங்கள் குடும்பத்தின் விளக்கே! அயராது உழைத்து எம்மையெல்லாம் உயர வைத்த உத்தமரே!

ஏழைகளின் தோழனாய், நேர்மைக்கோர் நிறைகுடமாய், கடமைக்கொரு கண்ணியவானாய், சமூகத்தின் மத்தியில் நன்மதிப்புப் பெற்ற எங்கள் தெய்வமே! உங்கள் நினைவு என்றும் எங்கள் மனதில் நிலைத்திருக்கும். உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைவேண்டி நிற்கும்:

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.

புங்குடுதீவு-5 3402

ஓ
சிவமயம்

ஷஷ்டியப்த பூர்த்தி விழா
(மணி விழா)

நிகழும் மங்களகரமான குரோதன ஐப்பசி மீ 12-ம் நாள் (25-5-85). சனிக்கிழமையும், பூச நக்ஷத்திரமும், ஷஷ்டி திதியும், சித்தயோகமும் கூடிய சுப தினத்தில் எங்கள் தகப்பனார் சிவஸ்ரீ கு. நகுலேஸ்வர சிவாச்சாரியார் அவர்கட்கு ஷஷ்டியப்த பூர்த்தி விழா வைபவம் கீரிமலை ஸ்ரீ நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வர ஆலயத்தில் காலை 7 மணி தொடக்கம் நடைபெறும் என்பதை உறவினர்கட்கும், அன்பர்கட்கும் அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

(குறிப்பு) நாட்டின் நிலைமை குறித்து தனிப்பட்ட அறிவித்தல் தருவதற்கு முடியவில்லை. மேற்படி அழைப்பிதழை அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

இங்ஙனம்;

கு. து. குமாரசாமி சர்மா,
ஆ. இராமநாத சர்மா,
கு. கேதீஸ்வர குருக்கள்.
(மருமக்கள்)

ந. குமாரசுவாமி சர்மா,
நகுலேஸ்வர ஆதீனம்
ந. ஸ்ரீரங்கநாதன்,
ந. கெங்காதரன்.
(பிள்ளைகள்)

மற்றும் உற்றார், உறவினர்கள். 3394

மணிவாக்கு

ஒரு நாட்டை கட்டி எழுப்புவதற்கு செயற்பாட்டு ஊழியர்களுக்குப் பஞ்சமிருப்பதில்லை; இலட்சியவாதி களுக்கும் திட்டமிடுபவர்களுக்குமே தட்டுப்பாடு ஏற்படுகின்றது. — சன்யாட்சன்.

நமது நோக்கு

உயிர்ப் பலிகளை நிறுத்த முடியாதா?

"போர் என்றால் போர், சமாதானமென்றால் சமாதானம்" என்று ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன அவர்கள் சில வருடங்களுக்கு முன் தமிழர் பிரச்னை தொடர்பாகக் கருத்துவெளியிட்டிருந்தார். அந்தக் கருத்தின் நிலைப் பாட்டிலிருந்து அவர் இம்மியும் அசைந்துகொடுக்காமலே இருந்துவருகிறார் என்பது இருதினங்களுக்கு முன் சொழும்பு குணசிங்கபுரத்தில் அவர் நிகழ்த்திய சொற்பொழிவு தெளிவு படுத்துகின்றது.

"தற்போதைய யுத்த நிலையில் இருதரப்பு பேச்சு வார்த்தை என்பதற்கு இடமில்லை ஒருபக்கம் பயங்கரவாதமும் மறுபக்கம் அரசாங்கமுமே இன்றையநிலை. இந்த நிலைமையில் மத்தியஸ்தம் என்று ஒன்று இருக்கமுடியாது" இவ்வாறு கூறியிருக்கிறார் ஜனதிபதி

'பயங்கரவாதம்' என்ற "பூதம்" எவ்வாறு கிளம்பியது என்பதையெல்லாம் அரசோ ஜனதிபதியோ அலசிக்கொண்டிருக்க விரும்பவில்லை. சர்வதேசப் பயங்கரவாதத்தின் ஒரு அம்சமாகவே இங்குள்ள நிலைமைகளுக்கு சப்பை கட்டுப்போடப்படுகின்றது.

"இலங்கைக்குப் பயங்கரவாதம் வந்துவிட்டது. அதனை ஒழிக்க உதவிதாருங்கள்" என இன்று அரசு அமெரிக்கா, பிரிட்டன், பாகிஸ்தான், சீனா முதலிய நாடுகளை நாடி ஓடுவது போலவே "இலங்கையின் இனப்பிரச்னை. இனஒழிப்பாக மாறிவருகிறது. அதனைத் தடுத்து எம்மைக் காப்பாற்ற முன்வாருங்கள்" என உலகின் பல பாகங்களிலும் இலங்கைத் தமிழர்களும் அவர்களின் இயக்கங்களும் முன்னெருபோது குரல் எழுப்பி வந்தார்கள் அவர்களுக்கென்று ஒரு அரசு இல்லாமையாலோ என்னவோ அந்தக் குரலுக்குச் சரியான ஆதரவு கிடைக்கவில்லை

அடக்குமுறையும் கலையெடுப்பும் காட்டுமிராண்டித்தனமாக விஸ்வரூபம் எடுக்க ஆரம்பித்ததைத் தொடர்ந்து தமிழ் இளைஞரின் எதிர்நடவடிக்கைகள் விரிவாகின. இதற்கு வெளி நாடுகளிலும் அவர்கள் ஆதரவைத் தேடலாயினர்.

நிலைமை இவ்வாறிருக்கையில், இலங்கைத் தமிழர் பிரச்னையை சர்வதேசப் பயங்கரவாதத்துடன் முடிச்சுப்போட்டு அதற்கு எதிராக அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகளின் இன்றைய ஆட்சியாளரின் ஆதரவை அரசு நாடத் துணிந்துள்ளமை பெரும் கவலையளிப்பதாகும்.

"பயங்கரவாதிகள்" என அரசு குறிப்பிடும் இளைஞர்கள் ஒருகாலத்தில் இந்த நாட்டின் சட்டதிட்டங்களுக்கு அடிபணிந்து அமைதியாக வாழ்ந்துவந்த குடும்பங்களின் பிள்ளைகள் தாம் என்பதை மறந்துவிடக் கூடாது காலத்தின் கோலத்தால் ஆயுதங்களை ஏந்திப் போராடும் நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டுள்ளார்கள். நியாயமான தீர்வு ஒன்று சாத்தியமாலை ஆயுதங்களைத் தூர எறிந்துவிடுவது ஒன்றும் பெரிய காரியமல்ல அவர்களுக்கு. ஆனால் வறட்டுக் கௌரவத்தை கைவிட மறுக்கும் அரசு அமைதிக்கான வழிகளை யெல்லாம் மூடிவருகிறது.

"இன்று நம் எல்லாரது முன்னுள்ள உடனடிப் பணியாதெனில், இரு தரப்பிலும் நிகழ்ந்துவரும் உயிர்ப் பலிகளை நிறுத்துவதே. இதுவே பொதுமக்களது விருப்பமும் கோரிக்கையுமாகும்" என சில தினங்களுக்கு முன் மூன்று எதிர்க்கட்சிகள் விடுத்த கருத்து சகலரதும் சிந்தனைக்குரிய ஒன்று.

இந்தியா முதற்கொண்டு அமெரிக்கா, பிரிட்டன், அவுஸ்திரேலியாவரை இலங்கை இனப்பிரச்னைக்கு ராணுவத் தீர்வு அல்ல அரசியல் தீர்வே பலனளிக்கும் என அடித்தடித்துச் சொன்ன பிறகும் திரும்பத் திரும்ப மூருங்கைமரத்தில் ஏறிவரும் வேதாளம்போல் ராணுவத் தீர்வி லேயே விடாப்பிடியாக நம்பிக்கை வைத்திருப்பது நிலைமைகளை மேலும் சிக்கலாக்கவே உதவும்.

நம்மாழ்வான் சிந்தனை

இவ்வுலக வாழ்க்கைக்கு உதாரணம்! வானத்திலிருந்து நாம் பொழியச்செய்யும் நீரை ஒத்திருக்கிறது. அது கால் நடைகளும் மனிதர்களும் தின்னக்கூடிய புற்பூண்டு முதலிய வைகளுடன் கலந்து (அடர்ந்து வளர்ந்து) பூமியும் அதிலிருந்து அழகும் அலங்காரமும், பெற்றுவிளங்கும் தருவாயில், அதன் சொந்தக்காரர்கள் அதனை அறுவடை செய்து, (வசப்படுத்திக்கொள்ள) இயன்றவர்களாக இருக்கின்றோம் என்றெண்ணிக்கொண்டனர் அதுசமயம் இரவிலோ பகலிலோ நம்முடைய கட்டளை பிறந்து அதனால் அவை நேற்று அங்கு இருக்கவேயில்லை என்று எண்ணக்கூடியவாறு நாம் அவைகளை அழித்துவிட்டோம். சிந்தித்துணரும் மக்களுக்கு இவ்வாறு நம் வசனங்களைத் தெளிவாக்குகின்றோம்.

(— அல்குர்ஆன் 10:24)

நோன்பு துறக்கும் நேரம் (மஃரிப்) 6. 21.

நோன்பு ஆரம்பிக்கும் நேரம் (ஹகர் முடிவு) 4. 18.

— தாராபுரம் ஸாபி

உற்சவம்

(மாவிட்டபுரம்)

குரும்பசிட்டி சித்திவிநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை கொடியேற்ற விழாவுடன் ஆரம்பமாகின்றது.

ஜூன் 1ம் திகதி தேர் உற்சவமும், மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளது.

வெள்ளிச் சிந்தனை

அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ்வதற்கு நமக்கு எது தேவை என்ற கேள்வியே பெரிய கேள்வி. இந்தக் கேள்விக்கு விடைகிடைத்துவிட்டால் இன்பமே எந்நாளும் துன்பமில்லை, என்ற தெளிவு நமக்கு வந்துவிடும் இத்தெளிவுக்குப் பின்னால் வரும் துன்ப துயரங்களும் இட்டல் இடைஞ்சல்களும் தலையை நீண்டத்துப் போகும் அலைகளாகுமேதவிர தலையைக் கொண்டுபோகும் மலைகளாகாது.

நமக்குத் தேவை பொருளா? அருளா? விளக்கமா? தெளிவா என்று அமைதியோடு இருந்து சிந்திப்போமானால் நமது சிந்தனை நமக்குத் தரும் விடையானது பெருவிருந்தாயிருக்கும் கருத்து - சிந்தனை விருந்து என்பதே அறுசுவை விருந்திலும் பார்க்க நமக்கு சக்தியை சாந்தியைத் தரக்கூடியது. நல்ல சிந்தனைகளும் கருத்துக்களும் மனதைப் பதப்படுத்தி நம்மை ஆளும் அதிசயமாகும். நல்ல கருத்தொன்றை நாம் படித்தால் அல்லது கேட்டால் நமது மனதில் அது பதிந்து மெல்ல மெல்ல வேர்விட்டு விழைந்து உணர்வுகளில் ஊறி நமக்குத் தெரியாமலேயே நம்மை அது நல்ல திசைக்குக் கொண்டு போகும் நியாயமாகவும் மகிழ்வாகவும் வாழ வழிகாட்டும்.

நாமே நம்மில் சந்தேகப்படும் படியாகவும், நாமே நம்மை நினைத்து அதிசயப்படும் படியாகவும் நம்மில் மாற்றங்கள் உண்டாகும். நமது வீட்டுக்குப் பக்கத்திலோ அல்லது ஒரு ஒதுக்கத்திலோ நாம் ஒரு விதையைப் போட்டுவிட்டு நாட்செல்லச் செல்ல அதனை மறந்துவிடுவோம். பலநாட்களித்து அந்த விதை செடியாகிவளர்ந்து நம்மை ஆச்சரியத்தில் ஆழ்த்திவிடுகிறது எப்போது இந்த விதையைப் போட்டோமோ என்று நமக்கே நினைவுக்கு வராது; ஆனால் அதன் வளர்ச்சி மாற்றம் நம்மைத் திகைக்கவைத்துவிடும். இதுபோலவே நாம் படிக்கின்ற, கேட்கின்ற சிந்தனை விதைகளும் நம்மில் மாற்றங்களையும் வளர்ச்சிகளையும் உண்டாக்கிவிடக்கூடியன. நாம் அறிந்த சிந்தனைகள் காலப்போக்கில் மறந்துபோய்விடும், ஆனால் அது நமது ஆழ் மனத்தில் பதிந்து நம்மை அறியாமலே நமக்குப் பயன்தருவதை நாம் நடைமுறை வாழ்வில் அவதானிக்கலாம்.

இதனாலேயே "கற்றிலன் ஆயினும்கேட்க" என்று வள்ளுவர் கூறினார். படித்துப் பதியவைக்காது போனாலும் கேட்டாவது சிந்தனைகளைப் பதியவையுங்கள் என்றார். சிந்தனை கண்ணால் சென்றாலும் காதால் சென்றாலும் பயன் விளைக்கும் என்பது பெரியார் அனுபவம்.

ஐந்து பேறறிவும் கரணங்கள் நான்கும் மூன்று குணங்களும் சிந்தையைச் செழுமைப்படுத்தி, மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்து சிறப்பற வைப்பனவாகும். சிந்தனைத் துளிகள் கருத்து விளக்கங்கள் முதலியவற்றினைச் சேகரிக்கும் மனோநிலையை உண்டாக்கிக் கொள்வது வாழ்வாங்குவாழ எடுக்கும் முயற்சியின் நிறவுகோலாகும்.

—ஈழத்துச் சிவானந்தன்

நீதிவிசாரணையென கேட்கவேண்டாம்!

வடக்கில், கிழக்கில் இன்று நடக்கும் 'அழிப்பு வேலைகளில்' ஒவ்வொரு சம்பவம் நடந்ததும் ஜனதிபதிக்கு "நீதி விசாரணை வேண்டும்" என்று தந்தி அடிப்பதும் ஒரு சம்பிரதாயமாகிவிட்டது!

இதுவரை இப்படியான எந்தக் கோரிக்கைக்கும் செவி சாய்த்து ஒரு நீதிவிசாரணைக் கமிஷனையோ சாதாரண ஒரு விசாரணைச்சபையையோ ஜனதிபதி நியமிக்கவில்லை; இனிமேலும் நியமிப்பாரென்பதற்கான அறிகுறிகளும் இல்லை!

மலேசியாவில் இனக்கலவரம்

1969-ம் ஆண்டில் மலேசியாவில் இனக்கலவரம் இடம் பெற்றது. 1969 ம் ஆண்டு மே மாதம் 13-ம் தேதி இக்கலவரம் வெடித்தது. பொலிஸினதும் ஆயுதப்படைகளினதும் உதவியுடன் இக்கலகத்தை மலேஷிய அரசு விரைவாக அடக்கி நாட்டின் அமைதியை நிலைநாட்டியது. இதுமட்டுமல்ல, இக்கலவரம் வெடித்ததற்கான காரணங்கள்பற்றி ஆராய்ந்து இனியும் இதுபோன்ற கலவரங்கள் ஏற்படாதவாறு தடுப்பதற்கான யோசனைகள் கோரப்பட்டதுடன் தேசிய செயற்பாட்டுச் சபை ஒன்றும் நிறுவப்பட்டது.

இச்சபை தனது அறிக்கையை 1969-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 9-ம் தேதி சமர்ப்பித்தது.

இனக்கலவரம் வெடித்ததற்கான காரணம் அதை விசுவாசமுள்ள பொலிஸ் படையினதும் ஆயுதப்படைகளினதும் உதவியுடன் அரசாங்கம் எப்படிக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது என்பதுபற்றியும் இனியும் இப்படியான தொரு கலகம் ஏற்படாமல் தடுப்பதுபற்றியும் அந்த அறிக்கையில் ஆலோசனை கூறப்பட்டிருந்தது

பல்வேறு இன, மத மக்கள் மலேஷியாவில் வாழ்கிறார்கள். சிங்கப்பூர், மலேயா, புறுனேய் ஆகிய நாடுகள் சேர்ந்து 'மலேஷியா' என்ற கூட்டமைப்பு அரசை ஏற்படுத்தியிருந்தன. மலேஷியாவுக்கும் சிங்கப்பூருக்கும் கருத்துவேறுபாடுகள ஏற்பட்டதும் அமைதியாக இரண்டும் தனிநாடுகளாகப் பிரிந்து கொண்டன.

1969 ம் ஆண்டில் முதல் தடவையாக வரலாற்றில் என்றுமே கண்டிராதவகையில் இனக்கலவரம் வெடித்ததும் உடனடியாகவே அதைக்கட்டுப்படுத்தி வெற்றிகண்டது மலேஷிய அரசு இனியும் இதுபோன்ற ஒரு கலவரம் ஏற்படாமல் தடுப்பதற்கான நடவடிக்கைகளையும் அது எடுத்தது.

இங்கு 1956 தொடக்கம்...

1956-ம் ஆண்டில் இலங்கையில் கொழும்பிலும் அம்பாறை, இங்கினியாகலைப்பகுதியிலும் வகுப்புக் கலவரம் தோன்றியது அம்பாறை, இங்கினியாகலைப் பகுதியில் குடியேறி விவசாயத்திலீடுபட்ட தமிழ்மக்கள் அங்கிருந்து விரட்டியடிக்கப்பட்டார்கள்.

1958-ம் ஆண்டில் நாடு முழுவதிலும் திட்டமிட்டுத் தமிழ் மக்கள்மீது தாக்குதல் நடத்தப்பட்டது. உயிரையும் உடைமையையும் இழந்த தமிழ்மக்கள் தங்கள் சொந்த மண்ணை வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு அகதிகளாகத் திரும்பினர்.

இந்த இரு கலகங்களும் எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவின் ஆட்சிக்காலத்தில் நடைபெற்றன. இக்கலகங்கள் தோன்றியதற்கான காரணங்களை ஆராயவோ தொடர்ந்து இனக்கலவரம் ஏற்படாமல் தடுப்பதற்கான ஆலோசனைகளைப்பெற்று நடவடிக்கை எடுக்கவோ அரசோ மற்றும் அரசியல் கட்சிகளோ அக்கறைசெலுத்தவில்லை.

சன்சோனிக் கமிஷன்

1977-ம் ஆண்டு திரு ஜே. ஆர். ஜயவர்த்தனை தலைமையிலான ஐக்கியதேசியக்கட்சி அரசாங்கம் ஆட்சிக்குவந்த பின் ஆவணி மாதம் 16-ம் தேதி யாழ்ப்பாணத்தில் பொலிஸ் பகுதியைச் சேர்ந்த வர்களினால் திட்டமிட்டுத் தொடங்கப்பட்ட கலவரம் நாடு முழுவதும் பரப்பப்பட்டு மூவாயிரத்துக்கு மேற்பட்ட தமிழர்கள் உயிரிழக்கவும் பத்தாயிரத்துக்கு மேற்பட்டோர் காயமடையவும் ஐம்பதாயிரத்துக்கு மேற்பட்ட தமிழர் அகதிகளாகத் திரும்பவும் வழிவகுத்தது.

எஸ். எம். ஜி.

இக்கலகம் பற்றி நீதிவிசாரணை நடைபெற வேண்டுமென்று வற்புறுத்தியதன் பேரில் இதுபற்றி விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்க ஒய்வுபெற்ற தலைமை நீதியரசர் எம் எல் சன்சோனி தலைமையில் தனிநபர் விசாரணைக் கமிஷன் நியமிக்கப்பட்டது. இக்கமிஷன் யாழ்ப்பாணத்திலும், கண்டி மற்றும் பகுதிகளிலும் விசாரணை நடத்தியது. இறுதியில் சன்சோனிக்கமிஷன் சமர்ப்பித்த அறிக்கை இன்றுவரை வெளியிடப்படாமலும் அமுல் செய்யப்படாமலுமுள்ளது. யாவரும் அறிந்ததே!

1981-ஆம் ஆண்டில்மாவட்டசபைத் தேர்தல்களைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் எரிப்பு, அழிப்பு வேலைகளில் ஈடுபட்டவர்கள் தமிழர்களை மீண்டும் அநாதைகளாக அகதிகளாகச் செய்தனர்.

பி. பி. ஸி.க்கு ஜே. ஆர். சொன்னது

1983-ம் ஆண்டு ஜூலையில் வெடித்த இனக்கலவரம் இதுவரை இலங்கையில் நடந்த கலவரங்களுக்கெல்லாம் உச்சமானது. தமிழரின் சொத்துக்களோ தமிழரோ இங்குமிஞ்சக் கூடாதென்றவகையிலும் எஞ்சிய தமிழர் தமது பிரதேசமெனக்கூறும் வடக்கு கிழக்குப் போனபின் பார்த்துக்கொள்ளலாம் என்ற ரீதியிலும் தாக்குதல்களும் அழிப்புவேலைகளும் அமைந்திருந்தன.

1977-ஆம் ஆண்டுச் சம்பவங்களுக்கும் 1983-ஆம் ஆண்டுச் சமபவங்களுக்குமிடையிலுள்ள வேறுபாட்டை, "அண்மைக் காலங்களிலிருந்து ஆயுதப் படைகள் மத்தியில் எவ்வித கட்டுப்பாடுமின்மையும் படையினர் மத்தியில் தீவிரமான தமிழர் எதிர்ப்புணர்வும் சில இடங்களில் கலவரங்களைத் தூண்டும் சம்பவங்களும் நடந்திருக்கின்றன." என்று ஜனதிபதி ஜே. ஆர் ஜெயவர்த்தனவே பி. பி. ஸி. புதுடில்லி நிருபருக்கு அளித்த பேட்டியில் (8-8-1983 அகில இந்திய வானொலி காலைச் செய்தி) கூறியிருந்தார்.

1983 ஆம் ஆண்டு ஆடிமாதக் கலவரத்தின்போது வெலிக்கடைச் சிறைச்சாலையினுள்ளேயிருந்த ஐம்பத்திரண்டு தமிழ்க் கைதிகள்-இவர்களில் பலர் சந்தேகத்தின் மீது பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்தவர்கள்

[5ம் பக்கம் பார்க்க]

இலங்கைத் தமிழர்களுக்கு சுயாட்சி வழங்கும் அரசியல் தீர்வு தேவை!

உலக தேவாலய சபை வலியுறுத்து

ஜெனீவா, மே 23

''இலங்கைத் தமிழர்களுக்கு சுயாட்சிவழங்கக்கூடிய அரசியல்தீர்வு காணப்படவேண்டும்'' என்று உலக தேவாலய சபை வலியுறுத்தியுள்ளது.

இச்சபையின் மகாநாடு நேற்று ஜெனீவாவில் இடம் பெற்றபோதே அதன் அறிக்கையில் மேற்கண்ட விபரம் வெளியிடப்பட்டது.

அந்த அறிக்கையில் மேலும் இலங்கையில் இடம்பெற்று வரும் படுகொலைகளுக்குக் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலக தேவாலய சபையின் தலைமைச்செயலாளர் எமிலியோகாஸ்ட்ரோ, இலங்கை இனப்பிரச்னைக்கு உடனடித் தீர்வுகாணவேண்டுமெனவும், இலங்கையிலுள்ள தமிழ்ப் பகுதிகளில் தமிழர்களை சுயாட்சியுடன் வாழச்செய்வதே இப்பிரச்னைக்கான சிறந்த தீர்வாக அமையுமென்றும் அவரது அறிக்கையில் தெரிவித்துள்ளார். (கி)

மேலும் ஒருவர் பரிசுவழங்க முன்வந்துள்ளார்

[யாழ்ப்பாணம்]

யாழ். இலக்கிய வட்டத்தின் இலங்கை இலக்கியப் பேரவையின் ஆண்டுப் பரிசுத் திட்டத்தில், ஸ்ரீலங்கா அச்சக உரிமையாளர் திரு. க. சிவராமன் பங்குகொள்ள முன்வந்திருக்கிறார். தனது தாயார் திருமதி நாகம்மா சண்முகம் நினைவாக வருடாவருடம் 1000 ரூபாவை இவர் பரிசாக வழங்குவார். யாழ், இலக்கியவட்டத்தின் செயற்றிட்டமான 'இலக்கிய பேரவை' யின் இலக்கிய பரிசளிப்பில் பல பிரமுகர்கள் கலந்துகொள்ள முன்வந்திருப்பது தெரிந்ததே.

யாழ் உபதபாலகங்களில் சகலவற்றுக்கும் தட்டுப்பாடு!

[மானிப்பாய்]

யாழ்ப்பாணத்திலுள்ள உபதபால் அலுவலகங்களில் தற்போது நிலவும் பலவித தட்டுப்பாடுகளுடன் காசுக்கட்டளைப் பத்திரங்கள், தந்திகள் அனுப்புவதற்கான பத்திரங்கள் ஆகியவற்றுக்கும் தட்டுப்பாடு நிலவிவருவதால் பொதுமக்கள் பெரும் கஷ்டத்துக்குள்ளாகி வருகின்றார்கள்.

கொழும்பிலிருந்து இந்த உபதாபால் அலுவலகங்களுக்கு நேரடியாக அனுப்பி வைக்கப்படும் இப் பத்திரங்கள் சில மாதங்களாக இங்கு அனுப்பப்படாததாலேயே இவ்வித தட்டுப்பாடு ஏற்பட்டு வருவதாக அறியப்படுகிறது.

புத்தர், காந்தி பிறந்த இந்தியா——————

அஹிம்சை, அமைதிக்கு தொடர்ந்து தன்னை அர்ப்பணிக்கும்!

மாஸ்கோவில் ரஜீவ் பேச்சு!!

புதுடில்லி, மே 23

''புத்தர், காந்தி பிறந்த இந்தியா தொடர்ந்து அஹிம்சை, சமாதானம் ஆகியவற்றுக்குத் தன்னை அர்ப்பணிக்கும்'' என்று இந்தியப் பிரதமர் திரு. ரஜீவ்காந்தி தெரிவித்தார்.

மறைந்த இந்தியப் பிரதமரும், அவரது தாயாருமான திருமதி இந்திராகாந்திக்கு மரணத்தின்பின் வழங்கப்பட்ட ''லெனின் சமாதான'' விருதைப் பெற்றுக்கொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு உரையாற்றினார்.

திரு. காந்தி தொடர்ந்து கூறியதாவது:

''பலவீனமான மக்கள் மீதான ஒடுக்குமுறைகளைக் களைவதில் வலிமையானவர்களுக்கெதிராக லெனின் நடத்திய போராட்டம் என்றும் அழியாத ஒன்றாகும்'' என்றார்.

அவர் மேலும், ''உலக இராணுவ கூட்டமைப்பில் சேர்ந்து கொள்ளாதபாரதம் உலக அமைதி, இராணுவ ஆயுதக் குறைப்பு போன்றவற்றுக்காக தொடர்ந்து பாடுபட்டுவரும் என்றார்''.

திருமதி இந்திரா நினைவாக தென்மேற்கு மாஸ்க்கோவில் உள்ள ஒரு சதுக்கத்துக்கு அவரது பெயரிடப்பட்டுள்ளது.(கி)

'நயாகரா' சென்ற தமிழ் குடும்பம் விபத்தில் சிக்கியது!

இருவர் பலி! ஒருவர் படுகாயம்

(ஒட்டாவ)

'நயாகரா நீர்வீழ்ச்சி'க்கு உல்லாசப் பொழுதுபோக்குவதற்காக காரில் சென்றுகொண்டிருந்த ஒரு தமிழ்க் குடும்பத்தினர்விபத்தில்சிக்கியதால்ஒரு பெண்ணும் ஒன்றரை வயதுப் பெண் குழந்தையும் ஸ்தலத்திலேயே பலியானார்கள்; மற்றொரு பெண் படுகாயமடைந்தார்; இரு ஆண்களும் ஒரு பெண்ணும் காயமெதுவுமின்றித் தப்பித்துக் கொண்டனர்.

மானிப்பாயைச் சேர்ந்த ராஜயோகி ராஜகுலசிங்கம் (43 வயது), தர்ஜிகா சத்தியமூர்த்தி (ஒன்றரை வயது ஆகியோரே விபத்தில் சிக்கி பலியானவர்களாவர்.

ராஜமனோகரி சத்தியமூர்த்தி (29 வயது) படுகாயமடைந்தவராவார் மற்றும் இ. சத்தியமூர்த்தி (38 வயது), இ. ராஜகுலேந்திரன் (30 வயது), நந்தினி ஞானசோதி (25 வயது) ஆகிய மூவரும் தெய்வாதீனமாக உயிர் தப்பினராம். இவர்கள்சென்றுகொண்டிருந்த கார் பலத்த சேதமடைந்துள்ளது. (மா)

இலங்கைப் பிரச்னை: "தமிழகத்தவர் உணர்ச்சியை மத்திய அரசு மதிக்கிறது!"

ஜி. கே. மூப்பனார்

(சென்னை)

இலங்கையில் தமிழ் மக்கள் அனுபவிக்கும் தொல்லைகள் குறித்து மத்தியஅரசு முழு அளவில் உணர்ந்துள்ளதாகவும் இதுசம்பந்தமாக தமிழக மக்களது உணர்ச்சிகளை 'மதிப்பதாகவும் அனைத்து இந்திய இந்திராகாங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. ஜி. கே. மூப்பனார் சென்னையில் நேற்றுத் தெரிவித்தார்.

''இந்தியா அணிசேரா நாடுகள் அமைப்பில் தலைமைப் பாத்திரத்தை வகிப்பதால் இதுகுறித்து அவசர முடிவு எடுக்கமுடியாதுள்ளது என்றும் இப்பிரச்னைக்கு அமைதியான தீர்வு ஒன்று காணப்படவேண்டும்'' என்றும் அவர்வலியுறுத்தினார். (ரா)

தட்டெழுத்துப் பரீட்சை 26-ல் நடைபெறும்

(புலோலி)

இலங்கை வங்கி ஆங்கில தட்டெழுத்தாளர்களை நியமிப்பதற்குக் கடந்த ஏப்ரல் மாதம் 7-ம் திகதி கொழும்பில் நடத்திய தட்டெழுத்துப் பரீட்சைக்கு வடபகுதியில் இருந்து விண்ணப்பித்துத் தோற்றமுடியாத பரீட்சார்த்திகளின் நன்மை கருதி மீண்டும் இம்மாதம் 26-ம் திகதி நடத்தப்படவுள்ளது

இது சம்பந்தமாக ஆட்சேர்ப்பு இலங்கைவங்கிஆளணி முகாமையாளர் சம்பந்தப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு அறிவித்தல் கடிதங்களை அனுப்பி வைத்துள்ளார்.

கடந்த ஏப்ரல் மாதம் 7-ம் திகதி நடைபெற்ற இத்தட்டெழுத்தப் பரீட்சைக்கான அழைப்புக்கடிதங்கள் 7-ம் திகதிக்குப் பின்னரே வடபகுதியிலிருந்து விண்ணப்பித்த பரீட்சார்த்திகளுக்கு கிடைத்தன. இதனைத் தொடர்ந்து பருத்தித்துறை பிரஜைகள் குழு இப்பரீட்சார்த்திகளின்நன்மை கருதி இத் தட்டெழுத்துப் பரீட்சையை மீண்டும் ஒரு திகதிக்கு நடத்துமாறு இலங்கை வங்கி ஆட்சேர்ப்பு ஆளணி முகாமையாளரைக் கேட்டிருந்தது குறிப்பித்தக்கது.

வடமராட்சியில் உண்ணாவிரதம்

[கரவெட்டி-புலோலி]

வடமராட்சியிலுள்ள உடுப்பிட்டி. பருத்தித்துறை கல்வி வட்டாரங்களிலுள்ள பெரும்பாலான பாடசாலைகளில் உண்ணாவிரதம் அனுஷ்டித்துத் தமது இக்கட்டானநிலையை வெளிப்படுத்தினர்.

நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலயம், மத்தெனி முங்கோடை முருகன் ஆலயம், பருத்தித்துறை சாரதா சேவாச்சிரமம் ஆகியவற்றில் பொதுமக்கள் திரண்டு வந்து உண்ணாவிரதத்தில் ஈடுபட்டனர்.

ஆஸி. மந்திரி தொண்டமானை சந்தித்தார்

(கொழும்பு)

அவுஸ்திரேலிய வெளியுறவு அமைச்சர் திரு. ஹேடன் நேற்றுமுன்தினம் கிராமிய தொழில் துறை அமைச்சர் திரு. எஸ் தொண்டமானைச் சந்தித்து ஆலோசனை நடத்தினார்.

இருவரும் மனம்விட்டுப்பேசியதாகக் கூறப்படுகிறது. அரைமணி நேரம் இடம் எபற்ற இச்சந்திப்பின்போது என்ன பேசப்பட்டது என்பது பற்றி திரு தொண்டமான் எதுவும்கூற மறுத்துவிட்டார்.

பதவிஉயர்வு

(புலோலி)

யாழ். அபிவிருத்திச்சபை புத்தூர் உப-அலுவலக பிரதம லிகிதர் திரு. எஸ். சதாசிவம் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

பதவி உயர்வு பெற்ற திரு. சதாசிவம் யாழ். அபிவிருத்திச் சபை கட்டைவேலி உப-அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தராகப் பொறுப்பேற்றுள்ளார்.

இன்றைய பலன்

வைகாசி-11 (1985-5-24)
வெள்ளி
திதி: சதுர்த்தி காலை 6-21ன் மேல் பஞ்சமி
நக்ஷத்திரம்: புநர்பூசம் பிற்பகல் வரை.

மேடம்: தொழில் நலன் தொல்லைகள் நிவர்த்தி குடும்பத்திலும் சிறு சச்சரவு தோன்றலாம், விடாமுயற்சி பயன் தரலாம்.

இடபம்: இன்று கொடுக்கல் வாங்கல் செய்வதை பின் போடவும் குடும்பத்திலும் நிதிபற்றா நிலமை தென்படும் நிதானத்துடன் செயல் படவும்.

மிதுனம்: அன்னியருடன் பழகுவதில் அதிக அவதானம் ஆபத்துக்கும் இடமேற்படலாம். ஆத்திரப்படுவதால் அருமையான சந்தர்ப்பத்தை இழக்க நேரும்.

கடகம்: தேக நிலையில் சோர்வு தென்படும். குடும்பத்திலும் கவலை தோன்றும் எதற்கெடுத்தாலும் ஆத்திரப் படுவீர்கள்.

சிங்கம்: பேச்சில் நிதானம் பெருமையைத்தேடித் தரும். சினேகிதவழியாலும் சிந்தனைக்கு விருந்து கிடைக்கும் நாவடக்கம் நன்று

கன்னி: சகோதரரின் விடயமாக கவலைநேரும். தூரத்து செய்தியும் கிடைக்கும், முயற்சியால் நன்மையுண்டு

துலாம்: அன்னைவழி ஆதரவு உண்டு, குடும்பத்திலும் மகிழ்ச்சி நிலவும் இயந்திரங்களுடன் பழகுபவர்கள் இன்று அவதானம் வேண்டும்.

விருச்சிகம்: புத்திரர் ஒருவரின் பிரிவு குறித்து வேதனைப்பட நேரும். குடும்பத்திலும் சோர்வு உண்டு. மனத்திடம் வேண்டும்.

தனுசு: வாழ்வில் வசந்தம் உண்டு, உங்கள் விடயங்கள் அனைத்தும் வேவுபார்க்கப்படும். வஞ்சகர் வலைவிரிக்கக் கூடும்.

மகரம்: சாஸ்திரவழியால் வரவுக்கு இடமுண்டு, குடும்பத்திலும் குதுகலம் குன்றும், விருந்தினர் வருகைககும் இடமுண்டு.

கும்பம்: ஆயுதங்களுடன் பழகுபவர்கள் இன்று அவதானம் வேண்டும். திடீர்தாக்குதல்களுக்கும் இடமுண்டு. எச்சரிக்கை நன்று.

மீனம்: மேலதிகாரிகளுடன் கருத்து வேற்றுமைகள் உருவாகலாம். தக்க சமயத்தில் அன்பர் ஒருவரின் ஆதரவு கிடைக்கும்.

திருமலை
வே. ரவீந்திரன்

முதலுதவி பயிற்சி நெறி இன்று பரீட்சை

(கோப்பாய்)

கோப்பாய் வட்டாரக் கல்வி மூலவள நிலையம் அண்மையில் நடத்திய முதலுதவிப் பயிற்சி நெறிக்கான பரீட்சை இன்று புத்தூர் சோமஸ்கந்த கல்லூரி வளவில் அமைந்த கோப்பாய் கல்வி மூலவள நிலையத்தில் நடைபெறுகின்றது.

எழுபத்தேழு யுவதிகள் இப்பரீட்சைக்குத் தோற்றுவதால் பரீட்சை திங்கட்கிழமையும் தொடர்ந்து நடைபெறும். அத்துடன் இரத்ததானத்திற்கான ஒழுங்குகளும் செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்

"வெரித்தாஸ்" முடக்கம்

(சுன்னாகம்)

பிலிப்பைன்ஸ் நாட்டிலிருந்து ஒலிபரப்பாகும் 'வெரித்தாஸ்' வானொலியின் தமிழ் ஒலிபரப்பு கடந்த 3 தினங்களாக இயங்காது இருக்கிறது. இதனால் இலங்கையில் அன்றாடம் நடக்கும் சம்பவங்களை உடனுக்குடன் அறிந்து வந் 'வெரித்தாஸ் வானொலி' நேயர்களுக்கு இவ்வொலி பரப்பு கடந்த 3தினங்களாகத் தடைபட்டது பெரும் ஏமாற்றத்தை அளித்துள்ளது.

ரொக்கப்பணம் மோதிரம் வழிப்பறிக்கொள்ளை

(சுன்னாகம்)

பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியர் நமோ என்பவரது 835 ரூபா ரொக்கப்பணமும், 2600 ரூபா பெறுமதியான தங்கமோதிரமும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

கடந்த திங்கட்கிழமை இவர் வேலை முடிந்து மாலை 7 மணியளவில் வீடு திரும்பிக் கொண்டிருக்கையில் பண்டத்தரிப்பு - மதகல் வீதியில் வைத்து இனம் தெரியாத மூன்று இளைஞர்கள் இவரைப் பலமாகத் தாக்கியபின் பணத்தையும், மோதிரத்தையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர். கொள்ளையரைக் கண்டு பிடிப்பதில் இளைஞர் குழுவொன்று ஈடுபட்டுள்ளது.

ராஜா தியேட்டர்
யாழ்ப்பாணம்
தினசரி 10-30, 2-00
கமலஹாசன்- ஜெயபிரதா
மஞ்சுபார்கவி
சலங்கை ஒலி
(ஈஸ்ட்மன் கலர்)
1984ம் ஆண்டின்
மிகச்சிறந்த படம்

லிடோ தியேட்டர்
சுதாகர் - ராதிகா
நடித்த
ஆயிரம் வாசல்
இதயம்
(ஈஸ்மன்கலர்புதியகொப்பி)

வேலிங்டன்
(யாழ். நகர்)
10-30, 2.30
பாக்கியராஜ் - சரிதா
நடித்த
மௌன கீதங்கள்
(ஈஸ்மன் கலர்)
புதிய கொப்பி

ஹரன் தியேட்டர்
தினசரி 10-30 — 2-30
150 நாட்களுக்குமேல்
சாட்சியளித்த வெற்றிச்
சித்திரம்
மோகன் - பூர்ணிமா
விதி
(கலர்)

ஆனந்தி
விடியோ சினிமா
(மனோகராவில்)
தினசரி 10-30, 2-30
ரஜனி, கமல்,
ஜெயசித்ரா நடித்த
இளமை
ஊஞ்சலாடுகின்றது
(கலர்)

மொடேர்ன்
மினி சினிமா
(ஸ்ரீலங்கா அச்சக லேன்
ராஜா தியேட்டருக்கு
அருகாமையில்)
BLACK
EMMANUEL
பிளாக் எம்மானுவல்
கருத்தோட்டமுள்ள
விறுவிறுப்பான காட்சி
களுடன், புத்தம் புதிய
படப்பிரதியில் தெளி
வாகக் காண்பிக்கப்படு
கின்றது,
ரசிகப் பெருமக்களின்
வேண்டுகோளுக்கிணங்க
24-5-85 கொடக்கம்
தினசரி 1 30 மணிக்
காட்சி மட்டும்
மதுரை சூரன்
தமிழ்ப் படம்
காண்பிக்கப்படும்

வின்ஸர்
தினசரி 10-30, 2-30
ஜேம்ஸ் பொண்ட் சித்திரம்
எம். ஜி. ஆர்.-ஜெயலலிதா
அசோகன், - நாகேஷ்
ஆனந்தன்
நடித்த
தனிப் பிறவி
(புதிய கொப்பி)
யாழ். வின்ஸர் மினி
தினசரி 10-30, 2-30
கார்த்திக்
அம்பிகா (இருவேடம்)
மேஜர் சுந்தரராஜன்
ராதாரவி, S. S. சந்திரன்
S. V. சேகர், வனிதா
நடித்த
பேய் வீடு
பயங்கரக் காட்சிகள்
கொண்டது.

லதா மினி
(கோண்டாவில்)
காலை 10-30 மாலை 3-30
கமலஹாசன் (இருவேடம்)
'கைதியின்டயறி'

S. T. L. மினிசினிமா
(திருநெல்வேலி)
10-30 2-00 4-30
DRACULA
ரகுலா
(கண்டிப்பாக வயது
வந்தவர்க்கு மட்டும்)

STANLEY MINI
10-15, 2-00, 4-15
Bruce Lee
நடித்த
Enter The
Drageon
(Karate Film)

"கல்வித்துறை மாற்றத்தால் மாணவர் கல்வி பாதிப்பு"

(கரவெட்டி)

"நாட்டின் கல்வித்துறையில் மாற்றங்களை ஏற்படுத்தும்போது நாட்டிலுள்ளகல்வி மான்களின் ஆலோசனையைப் பெற்று அதனை மேற்கொள்ளுதல் நாட்டிற்கு நன்மையளப்பதாகும்" என்று கரவெட்டி திரு இருதயக் கல்லூரி பாடசாலை அபிவிருத்திச்சபையின் நிர்வாகசபைக் கூட்டத்தில் உரையாற்றிய சபைச் செயலாளர் திரு. வ. மகாலிங்கம் குறிப்பிட்டார்.

சபையின் தலைவரும் கல்லூரி அதிபருமான திரு. சி. வின்சென்ற் தலைமையில் கூட்டம் நடைபெற்றது திரு. மகாலிங்கம் மேலும் பேசுகையில், கல்வித்திணைக்களம் பல ஆண்டுகளுக்குமுன் தேர்வுப் பரீட்சை என்று 8ம் வகுப்பு மாணவர்களுக்கு நடத்தியது. இப்பரீட்சையின் முடிவுகளின் படி மாணவர்களுக்கு தொடர்ந்து உயர்கல்வி பயில்வதற்கு மாணவர்களுக்கு உயர்கல்வி நெறிகளுக்கான வசதிகளையும் தொழிற்கல்வி நெறிகளுக்கான வசதிகளையும் செய்துகொடுப்பதாக அறிவித்தது. இதன்படி நூற்றுக்கணக்கான மாணவர்கள் உயர்கல்வி கற்கும் சந்தர்ப்பத்தை இழந்து, இறுதியில் தொழிற்கல்வி நெறிக்கான பயிற்சியையும் இழந்து. கல்வித் திணைக்களத்தின் தீர்க்க தரிசனமற்ற திட்டத்தால் உயர்கல்வியின்றித் தொழிற் கல்வியுமின்றி வீடுகளில் இருக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. மாறி மாறி வரும் அரசாங்கங்களின் ஆக்கபூர்வமற்ற திட்டங்களால் மாணவ சமுதாயம் பாழாடிக்கப்படுகிறது என்று கண்டித்தார்.

வங்கி அதிகாரிகளுக்கு அவசரத் தந்தி

(சுன்னகம்)

மக்கள் வங்கியில் உள்ள நகைகளை நொண்டிச் சாட்டுக்கள் கூறுது ஒப்படைக்கும் படி சுன்னகம் பிரதைகள் குழு, வங்கி உயர் அதிகாரிகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

சுன்னகம் பிரதைகள் குழுவின் கூட்டமொன்றிலேயே இந்த வேண்டுகோள் அவசரத்தந்திகள் மூலமாக விடுக்கப்பட்டது.

மக்கள் வங்கியில் அடைவு வைத்த நகைகளை உடனடியாக மீள வழங்குமாறும், வட்டியையும் முதலையும் வங்கியில் செலுத்திய பலர் ஒரு வருடத்துக்கு மேலாகியும் பணத்தினை வங்கியில் செலுத்தி நகைகளையும் வங்கியிலேயே வைத்திருக்கும் செயல் பற்றி அதிருப்தி கொண்டுள்ளார்கள். இதைத் தொடர்ந்தே சுன்னகம் பிரதைகள் குழு மேற்கண்ட அவசரத் தந்திகளை அனுப்பியுள்ளது.

(கி)

ஆராய்வர்

(சுன்னகம்)

உடுவில் உதவி அரச அதிபர் பகுதியிலுள்ள ஒய்வூதியம் பெறுவோர் சகலரும் நாளை சனிக்கிழமை சுன்னகம் பொது நூல் நிலையத்திற்கு அருகில் உள்ள பாடசாலையில் கூடி ஓய்வூதியம் பெறுவதில் இன்னுள்ள பிரச்னைகள் பற்றி ஆராயவுள்ளனர். வடபகுதியில் இன்று நிலவும் அசியல் சூழ் நிலையில் ஓய்வூதியத்தினைப் பாதுகாப்பாகப் பெறுவது பற்றியும் இவர்கள் முடிவு செய்யவுள்ளனர்.

நீதி விசாரணை...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டுநாட்கள் தொடர்ச்சியாகக் காட்டுமிராண்டித்தனமாகக் கோரக்கொலை செய்யப்பட்டனர்.

1981-ம் ஆண்டின் அழிப்பு, எரிப்பு வேலைகள் பற்றியோ 1983 ம் ஆண்டுக் கலவரங்கள் பற்றியோ குறிப்பாக சிறைச்சாலையினுள் நடைபெற்ற கோரக் கொலைகள் பற்றியோ இன்றுவரை நீதிவிசாரணையோ பகிரங்க விசாரணையோ நடைபெறவில்லை!

மன்னாரில் அழிப்புவேலை நடைபெற்றதும் அது பயங்கரவாதிகளின் வேலை என்று பழி சுமத்தியதும், அங்கு நேரில் சென்று பார்த்த போக்குவரத்து அமைச்சர் அல்ஹாஜ் முகம்மது "அது ஆயுதப்படைகளின் அழிவுவேலைதான்" என்று உண்மைநிலைபற்றி அறிக்கை சமர்ப்பித்ததும், அது பற்றி விசாரணை நடைபெறுமென்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணஉதவி வழங்கப்படுமென்றும் அறிவிக்கப்பட்டது.

டொலர்பாம், தென்பாம், கொக்கிளாய், நாயாறு சம்பவங்கள் பற்றி விசாரணை நடைபெற்றது மட்டுமல்ல அகதிகளுக்குத் தாராளமாக உதவிகளும் வழங்கப்பட்டன. இது வரை அவர்களுக்குப் பன்னிரண்டு லட்சம் ரூபாக்குமதிகமாக உதவி வழங்கப்பட்டிருக்கிறதாம்.

இவருக்கே அதிர்ச்சியென்றால்...

வவ்வெட்டித்துறையில் சமீபத்தில் நடந்த எரிப்பு, அழிப்பு வேலைகளில் எத்தனை உயிர்கள் பலியாகின என்ற விபரம் இன்னமும் சரியாகத் தெரியாது. இந்த நடந்த அட்டூழியங்களை யாழ்ப்பாணத்திலுள்ள இணைப்பதிகாரியான பிரகேடியரிடம் பிரதைகள்குழு எடுத்துக்கூறிய போது அவர் அதிர்ச்சியடைந்தாராம்.

இணைப்பு அதிகாரிக்கே இங்கு நடந்தவைகள் தெரியாமல் அதிர்ச்சியடைந்தாரென்றால் ஜனதிபதிக்கு இங்கு நடைபெறும் சம்பவங்களைச் சென்னால் பேரதிர்ச்சியடைந்து விடுவார்!

இதனால்தான் வாலெலியில் வவ்வெட்டித்துறை,குறிகாட்டுவான் படகுக் கோரக் கொலைகள் பற்றிய செய்திகள் ஒலிபரப்பப்படவில்லைப் போலும்!

எனவேதான் நீதிவிசாரணை வேண்டும்என்று கேட்கும்தீர்கள் அதில் அர்த்தமில்லை

இலங்கையில் தமிழ் இனம் அழிந்துவிடாமல் தடுப்பதற்குச் சர்வதேச நீதி விசாரணைக் கமிஷன் வேண்டுமென்று ஐநா வுக்கோ மற்றும் உலக நாடுகளுக்கோ வேண்டுகோள் விடுத்துப் பார்க்கலாம். எங்காவது நீதி கிடைக்குமா என்றாவது தெரிந்து கொள்ளலாம். நீதி செத்துப்போன இடத்தில் நீதியைத் தேடிப் பயன் என்ன?

நெடுந்தீவு படகுச்சேவை ஆரம்பம்

பீதியுடன் பயணிகள் பயணம்

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு- குறிகாட்டுவான் பிரயாணிகள் படகில் இடம் பெற்ற கொலை, தாக்குதல் சம்பவத்துக்குப் பின்னர் கடந்த செவ்வாய்க்கிழமை ஒரு படகு, சேவையில் ஈடுபட்டது

அப்படகில் இருந்த பிரயாணிகள் எக்காலம் என்ன நடக்குமோ என்றபீதியுடன் பிரயாணத்தை மேற்கொண்டனராம்.

கடந்த 15ம் திகதி மறக்கமுடியாத அச்சம்பவம் நடைபெற்ற இடத்திலேயே- நேற்று முன்தினமும் வேறுபடகுகளில் துப்பாக்கிகளுடன் வந்தவர்களால் சோதனையிடப்பட்டதாகவும் பிரயாணிகள் மிகவும் கவலைதோய்ந்த முகங்களுடன் காணப்பட்டதாகவும் நமது நிருபர் தெரிவிக்கிறார்.

இதனைத்தொடர்ந்து எதுவித துன்பங்களும் நேரிடாமல் பிரயாணிகள் படகு குறிகாட்டுவான் வந்துசேர்ந்தது.

(மா)

சேக்கிழார் குருபூசை

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினர் நாளை சனிக்கிழமை சேக்கிழார் சுவாமிகள் குருபூசையைக் கொண்டாடவுள்ளனர்.

நாளை 25ம் திகதி சனிக்கிழமை மாலை 4-30 மணியளவில் பண்டாரக்குளம் மருதவளவு ஸ்ரீவிநாயகர் ஆலயத்தில் குருபூசை இடம்பெறும்.

வித்துவான் க. சொக்கலிங்கம் தலைமையில் இடம் பெறும் இப்பூசையில் பெரிய புராண பாடல் ஓதல், சொற்பொழிவு ஆகியன இடம் பெறும்.

9 கைதிகள்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நிச் செல்லப்பட்ட 9 சிறைக்கைதிகளும், எச்சரிக்கை செய்யப் பட்டபின்னர் விடுவிக்கப் பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

கைதிகள் 9 பேரும் திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்டமைக்காக நீதிமன்றத்தில் குற்றவாளியாகக் காணப்பட்டு கோப்பாய் திறந்த வெளிச் சிறைச்சாலையில் சிறைத்தண்டனை அனுபவித்து வந்தனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இனந்தெரியாதகோஷ்டியினரால சிறைச் சாலைக்கட்டிடங்கள் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டதும், அங்கிருந்த ஒன்பது சிறைக்கைதிகளும் கடத்திச் செல்லப்பட்டதும் தெரிந்ததே. (மா)

ஆஹி. அமைச்சர் கருத்து

(கொழும்பு)

"இலங்கையின் ஆட்சி உரிமையை மதிக்கும் நாம் அங்கு நடக்கும் அடக்குமுறைகளை அங்கீகரிக்கவேண்டுமென்பது அவசியமில்லை" என்று ஆஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் திரு பில் ஹெய்டன் கொழும்பில் நிருபர்கள் மத்தியில் நேற்றுத் தெரிவித்ததாக செய்தி வெளியாகியுள்ளது. (மா)

பிரயாணிகள் தாக்கப்பட்டனர்

(திருமலை)

பஸ்களில் செல்லும் பிரயாணிகள் இடைநடுவில் இறக்கப்பட்டு தாக்கப்படுகிறார்களாம்!

சிருடைதரித்தவர்களே இத் தாக்குதல் சம்பவங்களில் ஈடுபடுவதாகக் கூறப்படுகிறது.

தம்பலகாமம், கொழும்பு ஆகிய இடங்களிலிருந்து திருகோணமலைக்கு வந்த பஸ்களில் பிரயாணம் செய்த பிரயாணிகளே தாக்குதலுக்குள்ளானார்களாம். (மா)

நாடுபூராவும் மின்தடை

(கொழும்பு)

லக்சபான மின்நிலையத்தில் நேற்றிரவு ஏற்பட்ட மின்தடை காரணமாக இரவு 10-10 மணி முதல் ஒருமணி நேரம் நாடு பூராவும் மின்சாரம் தடைப்பட்டது.



வாழ்நாள் முழுவதும் பயன்தரும் முதலீடு
நாகரீகமல்ல இன்றே தீர்மானியுங்கள்

டைகிக் என்ஜினியரிங் விகிற்றெட்
43, பரிஸ்ஹாவ் வீதி, யாழ்ப்பாணம்

தொழில் நுட்ப பயிற்சி நெறிகள்
Technical Courses

1. REFRIGERATION AND AIR CONDITIONING
   6 மாதம்-செய்முறை பயிற்சியுடனை-பகுதி நேரம்.
2. DRAUGHTSMANSHIP
   6 மாதம்-வார இறுதி/பகுதிநேர பகல்.
   Drawing Board எங்களால் வழங்கப்படும்.
3. ELECTRICAL WIRING
   2 மாதம்-செய்முறைப் பயிற்சியுடன்-பகுதிநேரம்.

★ பரீட்சை முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
★ வெளிநாடு செல்பவர்களுக்கும், சுயதொழிலில் ஈடுபடுபவர்களுக்கும் ஓர் அரிய சந்தர்ப்பம்.

ஆரம்பம்: 28-05-85.

Institute of Technical Studies
வட்டு-மேற்கு (V C.கந்தோர் முன்பாக)
வட்டுக்கோட்டை. (3403)

அநுராதபுரச் சம்பவம்: உளவு பார்த்ததாக 'ஒருவர்' கைது!

(அநுராதபுரம்)

தீவிரவாதிச்சுக்கு உளவு பார்த்தார் என்ற சந்தேகத்தின்மீது சிறு பிள்ளை யொன்று பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளது.

அநுராதபுரத்தில் சிங்கள பொதுமக்கள் கொலை செய்யப்படுவதற்கு முன்னதாக சிறு பிள்ளை யொன்றின் மூலம் தீவிரவாதிகள் இரகசியத் தகவல்களைப் பெற்றுக்கொண்டதாகவும், அவ்வாறு இரகசியத் தகவல் கொடுத்ததாகக் கூறப்படும் சிறு பிள்ளையொன்று பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளது.

அநுராதபுரம் பொலிஸ் நிலையம் தொடர்பாக இச் சிறுபிள்ளையிடம் தீவிரவாதிகள் இரகசியங்களை அறிந்து கொள்ளும்படி கேட்டிருந்தார்களாம்.

ஒய்வூதியம் மீண்டும் யாழ். விளையாட்டரங்கில்!

(யாழ்ப்பாணம்)

தபால் அலுவலகங்களில் ஒய்வூதியப் பணம் பெற்று வந்தவர்களுக்கு மே மாதத்துக்குரிய ஒய்வூதியம் யாழ். விளையாட்டரங்கில் வைத்து வழங்கப்படவுள்ளது விபரம் வருமாறு:

இம்மாதம் 27-ம் திகதி சுன்னாகம், பருத்தித்துறை, அளவெட்டி, உருப்பராய்.

28-ம் திகதி வல்வெட்டித்துறை, தெல்லிப்பளை, சாவகச்சேரி, பண்டத்தரிப்பு.

29-ம் திகதி ஊர்காவற்றுறை, காங்கேசன்துறை, வட்டுக்கோட்டை, மானிப்பாய்.

30-ம் திகதி காரைநகர், வேலணை, கொடிகாமம், சங்கானை, சுழிபுரம்.

31-ம் திகதி யாழ்ப்பாணம், புங்குடுதீவு, வண்ணார்பண்ணை, கைதடி.

ஜூன் 3-ம் திகதி கரவெட்டி, கொக்குவில், கோப்பாய், அச்சுவேலி.

4-ம் திகதி யாழ்ப்பாணம் நெடுந்தீவு, அனலைதீவு, நயினாதீவு, வயாவிளான்.

விளையாட்டரங்குக்கட்டிடத்தில் பலத்தபாதுகாப்பின்மத்தியில் வைத்து ஒய்வூதியப்பணம் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

நேற்று கடையாகக் கிடைத்த தகவலின்படி கொழும்பிலிருந்து வரவேண்டிய ஒய்வூதியம் வழங்குவதற்கான பணம் நேற்றுவரை வந்துசேரவில்லை என்று தபால் அலுவலக உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார். (மா)

நேற்றும்---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாரி அட்டையில் "சுந்தரம் (25 வயது) என்பவர் காட்டிக் கொடுத்தமைக்காக மரணதண்டனை வழங்கப்பட்டுள்ளது - "தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ)" என்று குறிப்பிடப் பட்டுள்ளது. (மா)

மரண அறிவித்தல்

தியாகராஜா ஐயர் கிருஷ்ணராஜன்

அநுராதபுரம், இல: 275, பிரதான வீதியைச் சேர்ந்த கிருஷ்ணராஜன் (ராஜன்) அகாலமரணமடைந்தார் என்பதை ஆழ்ந்த கவலையுடன் அறியத் தருகிறோம்.

1. ஜெயகௌரி (ஜெயா) சகோதரி
2. ராதாகிருஷ்ணன் (பாலன்) சகோதரன்
3. சிவகௌரி (ஜீவா) சகோதரி

இருபாலைச்சந்தி,
கோப்பாய்.
23 - 05 - 1985 3419

மரண அறிவித்தல்

ஆறுமுகம் கணபதிப்பிள்ளை

ஆறுமுகம் கணபதிப்பிள்ளை காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற சின்னப்பிள்ளை அவர்களின் அன்புக் கணவரும் காங்கேஸ், திருநாவுக்கரசு அவர்களின் அன்புத் தந்தையும் மங்கையற்கரசி பரமேஸ்வரி அவர்களின் அன்பு மாமனாரும், சுரேஸ் சுகந்தி அவர்களின் அன்புப் பேரனும், சின்னத்தம்பி காலஞ்சென்றவர்களான மாரிமுத்து பொன்னம்பலம், தம்பிப்பிள்ளை, செல்லமுத்து ஆகியோர்களின் அன்புச் சகோதரனும், காலஞ் சென்ற சண்முகத்தின் அன்பு மைத்துனரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியை (24-5-85) வெள்ளிக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இருந்து செம்மணி மயானத்திற்கு தகனத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

18/8, கொண்டலடிலேன்,
நல்லூர்,
யாழ்ப்பாணம். 3420

இப்பத்திரிகை "சமதாடு" லிமிட்டெட் இதாபனத்தாரால் யாழ்ப்பாணம் வெலிகோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் 1985ம் ஆண்டு மே மாதம் 24-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the Genera Post Office Sri Lanka, under number B 100236/81. Eelanadu P.O. Box 49. Telegram Eelanadu, Telephone: 22389-24126

மற்றுமொரு 'மரண தண்டனை'

(உடுவில்)

இணுவில் புகையிரத நிலையத்துக்கு அண்மையில், துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமடைந்த இளைஞர் ஒருவரின் சடலம் இன்று காலையில் காணப்பட்டது.

சமூக விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகவும், அதனால் அவருக்கு மரணதண்டனை வழங்கப்பட்டதாகவும் இயக்கமொன்றின் பெயர்குறிப்பிடப்பட்ட துண்டுப் பிரசுரம் இளைஞரின் சடலத்துக்கருகில் காணப்பட்டது.

நண்பகலுக்கு பின்னர் மரணமடைந்த நபரின் உறவினர்கள் சடலத்தை எடுத்துச் சென்றதாகத் தெரியவருகின்றது.

தமிழருக்கு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல் கட்சிகளுடனும் இணைந்து கூட்டாக ஆயுதப் போராட்டத்தை கைவிடும்படி போராளிகளுக்கு வேண்டுகோள் விடுப்பதுடன் அவர்களைப் பேச்சுவார்த்தைக்கு வரவழைத்து இந்தப் பிரச்சனையை தீர்த்து வைக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

இதேவேளை போராளிகள் ஆயுதப் போராட்டத்தை கைவிட வேண்டுமென்று நாம் வேண்டுகோள் விடுக்கிறோம் என்று திரு சரத் மீண்டும் குரல் எழுப்பியபோது குறுக்கிட்ட தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி.

லலித் அளித்த உறுதி

"உங்களுடைய வேண்டுகோள் ஏற்றுக் கொள்ளப்பட்டால் நாம் அதற்கேற்றவாறு நடவடிக்கை எடுப்போம்" என்று கூறினார்.

வல்வை நெடுந்தீவு சம்பவம்

இதனைத் தொடர்ந்து திரு. சரத் முத்தேட்டுவக மேலும் கூறியதாவது:

"இராணுவ நடவடிக்கை மூலம் இந்தப் பிரச்சனையை தீர்க்க முடியாது. வல்வெட்டித்துறை சம்பவத்தில் 79 தமிழ் இளைஞர்கள் கொல்லப்பட்டுள்ளனர் நெடுந்தீவுச் சம்பவத்தில் 32 பேர் கொல்லப்பட்டதுடன் பலர் காயமடைந்து ஆஸ்பத்திரியில் உள்ளனர். இந்தச் சம்பவங்களை விட்டு, ஓர்சிங்களப்பிரஜை என்ற ரீதியில் நான் வெட்கப்படுகிறேன்.

அரசாங்கம் அறிவிக்க வேண்டும்

"கொலைகள் நிறுத்தப்பட வேண்டும். இனப்பிரச்சனையைத் தீர்த்துவைக்க அரசாங்கம் விரும்புகின்றது என்பதைத் தெரிவிக்கவேண்டும். அநுராதபுரம் சம்பவத்தை மார்க்சிஸ்டுகளின் நடவடிக்கை என்று அரசாங்கம் கூறுகின்றது. மார்க்சிஸ்டுகள் ஒருநாளும் அப்பாவி மக்களை கொலைசெய்யமாட்டார்கள்.

புதிய கண்டுபிடிப்பு

"இனப்பிரச்சனை என்றால் உலக நாடுகள் உதவி வழங்க மாட்டாது என்ற காரணத்தினால்அரசாங்கம்மார்க்சிஸ்டுகள் என்ற புதிய கண்டுபிடிப்பை அறிமுகப்படுத்தியுள்ளது.

"அநுராதபுரம்சம்பவத்தின் பின்னர் இராமசாமி என்ற நபர் கைது செய்யப்பட்டார். அவரை யார் பொலிசில் ஒப்படைத்தது? என்று வடக, கிழக்குப் பகுதியில் பாதுகாப்பு இல்லை.

'அரசாங்கத்துடன் ஒத்துழைக்காத எல்லோரும் பயங்கரவாதிகள் என்று ஜனாதிபதி கூறியுள்ளார். அப்படியானால் நான் உட்பட இந்நாட்டில் உள்ள பலரும் பயங்கரவாதிகளே! இன்று சத்தியாக்கிரகம் இருக்கும் பௌத்த பிக்குகளும் அப்படிப் பார்க்கும் பட்சத்தில் பயங்கரவாதிகளே!" என்று திரு.சரத் குறிப்பிட்டார் [ரா]

பிரதி அமைச்சர் கூறிய யோசனை

(கொழும்பு)

வடக்கு, கிழக்குப் பகுதிகளிலிருந்து இராணுவம் வாபஸ் பெறவேண்டுமென்று சபையில் தெரிவித்த யோசனை மிகவும் பயனுள்ள யோசனை ஆகும் என்று பிரதி தொழில்அமைச்சர் திரு. ஜோசப்மைக்கல்பெரேரா நேற்று பாராளுமன்றத்தில் பேசுகையில் ஒரு கட்டத்தில் குறிப்பிட்டார்.

குருநகர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தர் முகதாவில் வைத்து இவ்வீடுகளை வழங்கினார்.

நேற்றுப் பிற்பகல் மாவட்ட முகாமையாளர், தமது உத்தியோகத்தர்கள் சகிதம் குருநகர் தொடர்மாடிக் கட்டிடத்தைச் சென்றடைந்தபோது, இணைப் பதிகாரி பிரிகேடியர் செனிவரத்ன கட்டிடத்தைப் பாரம் கொடுத்தார். அதனைத்தொடர்ந்து அங்கிருந்த இராணுவத்தினர் கட்டிடத்தைவிட்டு வெளியேறி யாழ் கோட்டையை நோக்கிப் புறப்பட்டனர். கட்டிடத்துக்கு முன்னால் வீதியில் போடப்பட்டிருந்த சில தடைகளையும் இராணுவத்தினர் அங்கிருந்து எடுத்துச் சென்றனர்.

இராணுவத்தினர் அங்கிருந்து வெளியேறியதும் அப்பகுதி மக்கள் தொடர்மாடிக் கட்டிடத்தை நோக்கி திரளாகப் 'படை' எடுத்தபோதிலும் அவர்கள் முகத்தில் சோகம் தாண்டவமாடியதைக் காணக் கூடியதாக இருந்தது.

தொடர்மாடிக்கட்டிட மண்டபத்தில் குழுமியிருந்த மக்கள் கூட்டத்துக்கு மத்தியில் முகாமையாளர் திரு. முருகையா உரைநிகழ்த்தினார்.

குருநகர்ப்பகுதியில்இதுவரை காலமும் நிலவிவந்த குடியிருப்பாளர் நெருக்கடி தணிந்திருப்பதாகவும், மேலும் எத்தனையோ குடும்பங்கள் குடியிருப்பதற்கு வீடுகள் இல்லாமல் கஷ்டப்படுவதற்கு அதிகாரசபை மூலம் நடவடிக்கை எடுத்துவருவதாகவும் முகாமையாளர் தமது உரையில் உறுதிவளித்தார்.

வீடுகள் வழங்கும் நடவடிக்கைகளில் உத்தியோகபூர்வமாகத் தம்முடன் ஒத்துழைப்பு வழங்கிய யாழ். மாநகர ஆணையாளர் திரு. சீ. வீ. கே. சிவஞானம், யாழ். உதவி அரசாங்க அதிபர் திரு மாணிக்கவாசகர், மற்றும் அதிகாரசபை உத்தியோகத்தர்களுக்கும் திரு. முருகையா பாராட்டு வழங்கினர்.

இக்கூட்டத்தில் 15 பேர் கொண்ட விழிப்புக்குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

தெரிவுசெய்யப்பட்ட குடியிருப்பாளர்கள் தட்டுமுட்டுச் சாமான்களுடன் தங்களுக்குரிய வீடுகளில் பிற்பகல் 4-30க்குக் குடிபுகுந்தார்கள். (மா)

இது கோவில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கடமையிலிருந்தவர்கள் இம்சைப் படுத்தப்பட்டதையும், அலுவலக முன்பக்கம் துப்பாக்கிக்குண்டுகளால் தாக்கப்பட்டதையும் ஆட்சேபித்து சகலரும் பாதுகாப்புக் கோரியும், வேறு இடம் ஒதுக்கும்படி கேட்டும் வேலைகளைப் பகிஷ்கரித்து வந்தது தெரிந்ததே.

ஊழியர்கள், உத்தியோகத்தர்கள் கோரிக்கை சம்பந்தமாக தபால் உயர் அதிகாரிகள், இணைப்பதிகாரியைச் சந்தித்துப் பாதுகாப்புக் கோரியதைத் தொடர்ந்து, அவர் மேற்கொண்டு எதுவும் நடக்காமல் பார்த்துக் கொள்வதாக அளித்த உறுதியின் பேரிலும், வேறு பாதுகாப்பான கட்டிடம் கிடைக்கும் வரையும் நேற்றுப் பிற்பகல் தொடக்கம் கடமையில் ஈடுபடத் தொடங்கியதாக அவ்வுத்தியோகத்தர் மேலும் சொன்னார். [மா]

பாராளு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அத்தனகல எம். பி. திரு. லஷ்மன்ஜெயக்கொடி நேற்று பாராளுமன்றத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

"ஈழம் வாழ்வெலியில் சிங்கள மொழியிலும் ஒலிபரப்பு செய்யப்படுவதாக கூறப்படுகின்றது. கப்பலில் இருந்து நடத்தப்படும் இந்த ஒலிபரப்பை தடை செய்ய அரசாங்கத்திற்கு முடியாதா? என்று திரு. லஷ்மன் ஜெயக்கொடி கேள்விக்கணை கொடுத்ததுடன், வல்வெட்டித்துறை, நெடுந்தீவு சம்பவங்கள மார்க்சிசவாதமா? இனவாதமா? என்றும் கேட்டார்.

"ஜனாதிபதி விரைவில் இந்தியா போகவுள்ளதாக அறிகிறேன். இத்தருணத்தில் அவர் இந்தியா சென்று வருவது 'நல்லது என்றும் கூறிய திரு லஷ்மன் அரசாங்கம் இன்று தோல்வியை தழுவியுள்ளது என்றும் அதனால் அரசாங்கம் ராஜினாமாசெய்து பொதுத்தேர்தலைநடத்த முன்வரவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். (ரா)

மரண அறிவித்தல்

கணபதிப்பிள்ளை குமரையா

(கணக்குப்பிள்ளை)

(P. S. and Co. கெக்கிராவை — அம்பாள் மில் சண்டிலிப்பாய்)

நயினாதீவு 3 ம் வட்டாரத்தைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை குமரையா 22-05-1985ல் அகால மரணமானார். இவர் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - இராமாசிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலம் சென்ற இரகுநாதர் - சிவகாமிப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், மங்களகௌரி (ஆசிரியை, ஒமந்தை ம. வி.), ரவீந்திரன் (மானிப்பாய் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், தயாளநேசனின் (பிரான்ஸ்) அன்பு மாமனாரும், தர்சிகாவின் அன்புப் பாட்டனாரும், வேலாயுதம், விசாலாட்சி, பார்வதி, சின்னம்மா, சபாபதிப்பிள்ளை (உதவி அரசாங்க அதிபர், பூநகரி), காலம் சென்ற பொன்னம்மா, பராசக்தி ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிவஞானசுந்தரம்பிள்ளை (High Ways Dept Mannar), காலஞ்சென்ற சிவானந்தராசா (ஆசிரியர்), காலஞ்சென்ற நாகேஸ்வரி, தணிகாசலம், சிவபாதசேகரம் (ஆசிரியர்) ஆகியோரின் மைத்துனரும், தர்மலிங்கத்தின் சகலனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 25-5-1985 சனிக்கிழமை காலை 10 மணிக்கு காளிகோவிலடி, மூளாய் ரோட், வட்டுக்கோட்டை இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தகவல்: இ. சிவபாதசேகரம் (ஆசிரியர்)
க. கந்தவேள்
பா. காசிநாதன் (ஆசிரியர்)

3421